பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 10 2025 SUNDAY 12.40 PM

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் பலனாக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விற்பனை அதிகரித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. Chhath பண்டிகையின் இரண்டாம் நாளான இன்று கர்ண பூஜையாக கொண்டாடப்படுவதையொட்டி, மக்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. தாய்லாந்து – கம்போடியா இடையேயான எல்லைப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

4. வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shaina Manimuthu பட்டம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பின் பலனாக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விற்பனை அதிகரித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், தீபாவளி உள்ளிட்ட பண்டிகை காலத்தில் மக்கள் உள்நாட்டு தயாரிப்புகளை அதிகம் வாங்கியிருப்பதாக கூறினார்.

*(Sound Byte – பிரதமர் (1) – 37 Sec. )*

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ஆவது பிறந்த நாள் கொண்டாடப்பட இருப்பதை சுட்டிக்காட்டிய பிரதமர், சுதந்திரப் போராட்டத்தில அவரது பங்களிப்பு என்றும் நினைவுகூரத்தக்கது என்றார்.

*(Sound Byte – பிரதமர் (2) – 60 Sec. )*

தமது வேண்டுகோளை ஏற்று மத்திய பாதுகாப்புப்படைகளில் உள்நாட்டு நாய் இனங்களின் பயன்பாடு அதிகரித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

*(Sound Byte – பிரதமர் (3) – 54 Sec. )*

ஒடிஷாவின் கோராபுட் பகுதியின் காபி சுவை பற்றி குறிப்பிட்ட பிரதமர், கர்நாடகத்தின் கூர்க், தமிழகத்தின் பழனி, சேர்வராயன் மலை, ஆனைமலை உள்ளிட்ட பகுதிகளில் விளையும் காபியின் சுவை காரணமாக உலகெங்கிலும் இந்தியாவின் மீதான நாட்டம் அதிகரித்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*(Sound Byte – பிரதமர் (4) – 42 Sec. )*

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதை ஊக்குவிக்கும் வகையில், சட்டீஸ்கர் மாநிலத்தின் அம்பிகாபூரில் புதுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் திரு நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

*(Sound Byte – பிரதமர் (5) – 48 Sec. )*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

<<<<<<>>>>

Chhath பண்டிகையின் இரண்டாம் நாளான இன்று கர்ண பூஜையாக கொண்டாடப்படுவதையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கர்ண பூஜையை முன்னிட்டு விரதம் இருந்து இந்த புனித பண்டிகையை கொண்டாடும் அனைவருக்கும் மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

இந்த புனித நாள் மக்களின் நம்பிக்கை, கட்டுப்பாடு போன்றவற்றை பறைசாற்றுவதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், அன்னை Maiya தேவியின் அருளாசி அனைவருக்கும் கிடைக்கட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

ஜம்மு காஷ்மீர் சுதந்திர இந்தியாவுடன் இணைந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1947-ஆம் ஆண்டு இதேநாளில், காஷ்மீரை ஆட்சி செய்த மன்னர் ஹரி சிங், இந்தியாவுடன் ஜம்மு காஷ்மீரை முறைப்படி இணைத்தார்.

அதனைத்தொடர்ந்து, பாகிஸ்தான் படையெடுப்பில் இருந்து கஷ்மீரை பாதுகாக்கும் வகையில், இந்திய ராணுவம் அங்கு சென்றதை நினைவுகூரும் விதமாக ராணுவத்தின் சார்பில், இந்நாள் துணிச்சல் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற துணிச்சல் ஓட்டத்தை ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி தொடங்கிவைத்தார்.

ராணுவ அதிகாரிகள், வீரர்கள், விளையாட்டு வீரர்கள், உடற்பயிற்சி ஆர்வலர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>

தாய்லாந்து – கம்போடியா இடையேயான எல்லைப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூரில் இன்று தொடங்கிய ஆசியான் உச்சிமாநாட்டின் இடையே அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் முன்னிலையில் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது.

இந்த உடன்படிக்கை தென்கிழக்கு ஆசியாவின் நிலைத்தன்மைக்கு மைல்கல்லாக அமையும் என தலைவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அப்போது பேசிய அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், அமைதியை நிலைநாட்டுவதில் பொருளாதார ராஜ தந்திரம் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார்.

இருநாடுகளிலும் அமைதி நிலவினால்தான் வர்த்தகம் செழித்தோங்கும் என்றும் அவர் கூறினார்.

இந்த உடன்படிக்கை ஏற்பட உதவியதற்காக கம்போடிய பிரதமர் திரு Hun Manet மற்றும் தாய்லாந்து பிரதமர் திரு Anutin Charnvirakul ஆகியோர் அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

<<<<<<>>>>

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது நாளை புயலாகவும், நாளை மறுநாள் தீவிர புயலாகவும் வலுப்பெற்று, ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே கரையை கடக்கக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இவ்வாறு கூறிய அவர், வட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவித்தார்.

*(Voice Byte – செந்தாமரை கண்ணன் – 51 Sec. )*

<<<<<<>>>>

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shaina Manimuthu பட்டம் வென்றார்.

சீனாவின் Chengdu -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 22-20 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Chiharu Tomita-வை வென்றார்.

<<<<END>>>>